# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2024

இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து நிகழ்நிலை (Online) முறையினூடாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ் அறிவித்தலில் "செயலாளர்" என்பது நிதி, "நிர்வாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரைக்" குறிக்கும். "சேவை" என்ற சொல் வேறு விதமாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் "இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையைக் குறிக்கும்".

2. இப்பரீட்சையின் மூலம் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

ஆட்சேர்ப்பானது எழுத்து மூல பரீட்சையின் பெறுபேறுகளிலிருந்தும் பொது நேர்முகப் பரீட்சையிலிருந்தும் மேற்கொள்ளப்படும்.

**பரீட்சைத் திகதி**.- 2025, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நிகழ்நிலை ஊடாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது ஆரம்பமாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.03.14 ஆந் திகதி ஆகும். இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2025, மே மாதம் கொழும்பு நகரில் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்ட வகையில் இப்பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரத்தை செயலாளர் கொண்டுள்ளார்.

3. நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 100 ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்கத் தீர்மானிக்கப்படும்.

4. அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது பணிபுரியும் அலுவலர்கள், விண்ணப்பத்தின் நகல் பிரதியொன்றை தங்கள் தனிப்பட்ட பெயர்வழிக் கோப்பில் உட்சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டுமென்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது, நிறுவனத் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகல் பிரதி மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **சேவை நிபந்தனைகள்** :

5.1 அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.04.05 ஆந் திகதிய 1804/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையினதும் நிதிப்பிரமாணக் கோவையினதும் ஏற்பாடுகளுக்கும் 2022.12.14 ஆந் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளுக்கும் உட்பட்ட வகையில் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

5.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுள்ளதுமாகும். உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் வருங்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான முடிவுகளுக்கு நீங்கள் உட்படுத்தப்படுவீர்கள். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் அறிவிக்கப்படும் பிரகாரம் நீங்கள் இந்நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

5.3 இந்த நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருட காலப்பகுதியினுள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.4 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கும் இணங்க பதவியில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருட காலத்துக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

6. **சம்பள அளவுத் திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 1 ஆம் அட்டவணையின் பிரகாரம் இந்த பதவிக்கான மாதாந்த சம்பளமானது - ரூபா 47,615.00 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 110,895.00 (SL- 01-2016) ஆகும். இந்தக் கொடுப்பனவு சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

7. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்** :

(அ) i. இலங்கைப் பிரசையாக இருத்தல்;

ii. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல்;

iii. நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குப் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை எல்லா வகையிலும் பெற்றிருத்தல்;

iv. எந்தவொரு மதத்தைச் சார்ந்த போதகரும் இந்த பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்;

v. எந்தவொரு நபரும் இந்த திறந்த போட்டி பரீட்சையை இரண்டு (2) தடவைகளுக்கு மேல் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். (முன்னைய சேவை பிரமாணத்தின் கீழ் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவைக்கான தரம் II/II இற்கு ஆட்சேர்ப்பிற்கான பரீட்சைக்கு தோற்றுவதற்கான எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படமாட்டாது);

vi. இப்பரீட்சைக்கு ஆட்சேர்ப்பதற்கான தேவைப்பாடுகள் அனைத்தும் இவ்விண்ணப்பத்தின் முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்** :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் (கல்வி கற்ற காலப்பகுதி ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்களாக இருத்தல் வேண்டும்);

அல்லது

(ii) உயர் நீதிமன்றச் சட்டத்தரணியொருவராக இருத்தல்

அல்லது

(iii) பட்டயக் கணக்காளரொருவராக இருத்தல்.

குறிப்பு.- (i), (ii), (iii) தகைமைகள் பயன்வலுப்பெறும் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாக அல்லது அதற்கு முன்னரான ஒரு திகதியாக இருத்தல் வேண்டும்.

(இ) **வயது**.- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் இருபத்திரண்டு (22) வயதுக்கு குறையாதவராகவும் இருபத்து எட்டு (28) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க, விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 2003.03.14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ 1997.03.14 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகும் அதிகபட்ச வயதெல்லை முப்பத்தைந்து (35) வருடங்களாகும். (அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் அரசாங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் 01/ 2020 சுற்றறிக்கைக்கு அமைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்பட்டிருத்தல் கூடாது.)

(ஈ) விசேட தேவையுடைய விண்ணப்பதாரர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின், அது தொடர்பாக விண்ணப்பத்தில் கட்டாயமாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. **ஆட்சேர்ப்பு முறை** :

8.1 ***எழுத்துப் பரீட்சை***.- பின்வரும் பாடங்களைக் கொண்ட மூன்று (03) வினாத்தாள்களை உள்ளடக்கிய எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும். பாடங்கள் மற்றும் அவற்றில் சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன :

| *பாடம்* | *புள்ளிகள்* | *சித்தியடைவதற்கு பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| 01. கிரகித்தல் | 100 | 40 |
| 02. நுண்ணறிவு | 100 | 40 |
| 03. பொது அறிவு | 100 | 40 |

8.1.1 எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :

**பாட இலக்கம் 01 - கிரகித்தல்** :
பரீட்சார்த்தியின் விடயங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய இயலுமை, தொடர்பாடல் திறன், சாராம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் ஆக்கத்திறன் ஆகிய திறன்களை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டுள்ளது.

( காலம் : 1 1/2 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்)

**பாட இலக்கம் 02 - நுண்ணறிவுப் பரீட்சை** (Intelligence Test) :
பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், மாற்றீடு, பொருள்கோடல், தொடர்பு காணல், மொழிபெயர்த்தல், பிரச்சினைகளை தீர்க்கும் இயலுமை, காரண காரியத் தொடர்புகளைளைத் புரிந்து கொள்ளல், எதிர்வுகூறல், தகவல்களை ஒழுங்கமைத்தல், வடிவங்களை இனங்காணல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் போன்ற இயலுமைகளை அளவிடுவதை நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாப்பத்திரமாகும்.

( காலம் : 1 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்)

**பாட இலக்கம் 03 - பொது அறிவு** :

இலங்கையின் புவியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசாரச் சுற்றாடல் உள்ளிட்ட இலங்கையின் முழுச் சுற்றாடல் தொடர்பாகவும் மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம பெறுகின்ற சமகால நிலைமைகள் தொடர்பிலும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பிலும் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிக்கும் விதத்தில் பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடையளிக்கும் வகையிலான வினாக்களை மாத்திரம் கொண்ட வினாப்பத்திரம் ஆகும்.

( காலம் : 1 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்)

8.2 *சாதாரண நேர்முகப் பரீட்சை.-*

(i) மேலே விடய இலக்கம் 06 இல் குறிப்பிட்டுள்ள ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் பூர்த்தி செய்யப் பட்டுள்ளனவா என்பதையும் அதன் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் தொடர்பான வரையறைகளுக்கு உட்பட்டவையாக உள்ளனவா என்பதையும் பரீட்சிப்பதற்காகவும் சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகள் வழங்கப்பட்டதன் பின்னர் சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இதற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(iii) சாதாரண நேர்முகப் பரீட்சை சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(iv) ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது நாற்பது (40) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களில் அனைத்துப் பாடங்களினதும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் சாதாரண நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு எழுத்துப் பரீட்சையில் அவர்கள் பெற்ற திறமை ஒழுங்கு மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். தகைமை பெறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேலே குறிப்பிட்ட எண்ணிக்கைக்குச் சமனானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் அவ்வாறு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**கவனிக்க.**- நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவது நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதாகக் கருதப்படமாட்டாது.

8.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை யினரை, ஆட்சேர்ப்புச் செய்யும் போது தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளை திறமை ஒழுங்கில் இச்சேவையின் தரம் மூன்றிற்கு (III) ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

8.4 தகுதியின் ஒழுங்கு வரிசைப்படி வெற்றிடங்களை நிரப்பும் போது, மீதமுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையான சமமான புள்ளிகள் பெற்றுள்ள தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் இருப்பின் மற்றும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான சேவைகள் தேவைப்பாடொன்று காணப்படின், அவ்வாறு சமமான புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளில் இருந்து மேலும் தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்க முடியும் இந்தத் தெரிவு முறை பின்வருமாறு இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் :

(i) விண்ணப்பதாரர்களின் திறனை மதிப்பிடுவதற்கான எழுத்துப் பரீட்சை ;

(ii) திறன் அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை ;
எழுத்துப் பரீட்சை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும்.

நேர்முகப் பரீட்சைக் குழு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும்.

இந்தத் தெரிவு செய்தல் நடைமுறையின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் பற்றிய மேலதிகத் தகவல்கள் www.psc.gov.lk என்ற அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பின்வரும் இணையப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

முகப்பு பக்கம் ➔ பதிவிறக்கம் செய்தல் ➔ செயல் ஒழுங்குகள் ➔
விசேட தெரிவு செய்தல் நடைமுறைகள்.

9. **பரீட்சை மொழி மூலம் :**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

குறிப்பு.-

(i) விண்ணப்பதாரர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் மாத்திரம் விடையளித்தல் வேண்டும்.
(ii) பரீட்சார்த்திகள் தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை எழுதுவதற்கான ஊடக மொழியை மாற்றுவதற்குப் பரீட்சார்த்திகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது.
(iii) பரீட்சார்த்திகள் அனைவரும் மூன்று (03) வினாத்தாள்களுக்கும் தோற்றுவது கட்டாயமானதாகும்.

10. **பரீட்சை நிபந்தனைகள்** :

I. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கிலத்தில் மாத்திரம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை (Online) மூலம் அனுப்பி வைக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியான விண்ணப்பப்படிவமொன்றாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது முறைமையினுள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவித்தல் கொடுக்கப்படும். நிகழ்நிலை (Online) விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தை (instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யும் போது அந்த அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் விண்ணப்பத்தில் செய்யப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமொன்றாகக் கருதப்படமாட்டாது. முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

II. பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை (Online) முறையூடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மாத்திரம் பணம் செலுத்தப்படல் வேண்டும் :

(i) எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டைகள் மூலம் (Any Bank Credit Card);
(ii) இணையம் மூலம் கொடுப்பனவு செய்ய முடியுமான எந்தவொரு வங்கி வரவு அட்டை (Debilt Card) மூலம் (Bank Debit Card with the Facility of Internet Transactions);
(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை மூலம் (Online Banking Method of Bank of Ceylon);
(iv) இலங்கை வங்கியின் ஏதேனுமொரு வங்கிக்கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon).

குறிப்பு:

(அ) இந்த முறைகள் மூலம் எவ்வாறு பணம் செலுத்துவது என்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையதளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) பணம் கிடைத்தமை தொடர்பாக குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக்கான கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ள கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும்போது ஏற்படுகின்ற வழுக்கள்/ தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு எந்தவொரு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

III. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்

திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் நிகழ்நிலை (Online) மூலம் மாத்திரம் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அது தொடர்பாக குறிப்பிட்டு அறிவித்தலொன்றின் மூலம்/ விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை எனில், அவர் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தாபன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் அது பற்றி விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே வதிந்துள்ள ஒருவராக இருப்பின், இந்த விபரங்களுடன் அனுமதி அட்டையின் பிரதியொன்றை உடனடியாக தொலைநகல் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமான விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கமொன்று சகிதம் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக்கடிதமொன்றை அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சை திணைக்களத்தினால் கோரப்படுகின்ற ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(iv) பரீட்சார்த்திகள் தமக்குக் குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அனுமதி அட்டையில் பரீட்சைக்கு முன்னரே அவரது கையொப்பத்தை உரிய முறையில் உறுதிப்படுத்திக் கொண்டு அவர் பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே அதனை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இந்த ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து அவர் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

குறிப்பு.- பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

11. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்** : பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் விதத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஓர் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் அவர்களது அடையாளத்தை உறுதி செய்து கொள்ளத்தக்கவாறு தங்கள் முகத்தையும் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்கள் எதனையும் அணிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளத்தக்கவாறு இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதி செய்வதற்கு மறுக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் உட்பிரவேசித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிவடைந்து மண்டபத்தை விட்டு வெளியேறும் வரையில் தங்கள் முகத்தையோ இரு காதுகளையோ மறைக்காது இருத்தல் வேண்டும்.

12. வர்த்தமானி அறிவித்தலின் 8.1 பந்திக்கமைய தகைமையுடைய விண்ணப்பதாரிகள் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் தேர்ச்சிக்கமைய தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் ஆவணம் செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk வலைத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

13. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து, இப்பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் ஏதேனும் விடயங்களை அவை பொய்யானவை என்பதை அறிந்த நிலையில் சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருமிடத்து, அல்லது ஏதேனும் முக்கியமான ஒரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பாராயின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

14. இவ் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் இருப்பின், அவை தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டவகையில் செயலாளரினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுக்கப்படும்.

15. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களிலான அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின், அவ்வாறான சந்தர்ப்பமொன்றின் போது சிங்கள மொழியிலான அறிவித்தலின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு - 01,
2025, சனவரி 29.

02-53